மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை அவ்வளவு வரம்பு மீறி நடந்து கொண்ட உறுப்பினர்கள் வருத்தம் தெரிவிக்காமல் மறுபரிசீலனை செய்ய இயலாது. இங்கே வரம்பு மீறி நடந்து கொண்ட செயல்களுக்காக அவர்கள் தள்ளி வைக்கப் பட்டிருக்கிறார்கள். எனவே, அவர்கள் வருத்தம் தெரிவிக்காமல் மறுபரிசீலனை செய்ய இயலாது.

(இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் பேரவையிலிருந்து வெளியேறினார்கள்).

எதிர்கட்சித் தலைவர் இப்படி உறுப்பினர்களைப் பார்த்து, கையசைத்து இவ்வளவு வற்புறுத்திக் கூப்பிடுவது நல்லது அல்ல. ஒரு எதிர்க்கட்சித் தலைவர் வெளிநடப்பு செய்கிறார் என்றால் அவருக்குப் பின்னாலே அவர் கட்சியினர் செல்கிறார்கள் என்று தான் பொருள். வாருங்கள் என்று வற்புறுத்தி விடாப்பிடியாக (குறுக்கீடு) இல்லை, இல்லை, இப்பொழுது நான் கண்ணெதிரே பார்த்தது (குறுக்கீடு) வெளியே வாருங்கள் என்று வற்புறுத்தி அழைக்கிறார்கள் ; அழைத்தார்கள். இந்த இடத்திலேயிருந்து அழைத்தார்கள். (குறுக்கீடு) சரி, அப்படியே உட்காருங்கள். இருவரும் உட்காருவீர்களேயானால் நல்லது. இருக்க வேண்டு மென்று விரும்புகிறீர்கள், உட்காருங்கள். (சிரிப்பு).

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடு)

திரு. ஜி. பழனிசாமி : தலைவரவர்களே. . .

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்களும்தான் வேண்டு கோள் வைத்தீர்கள். நான் தீர்ப்பைச் சொல்லியிருக்கிறேன். அதற்குப் பிறகு வேண்டாம். (குறுக்கீடு) இல்லை, இது முடிந்து விட்டது.

## 4. கவன ஈர்ப்பு.

உசிலம்பட்டியிலுள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரி சரிவர இயங்காமல் இருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கே. தவசி, ஓ ஆர். இராமச்சந்திரன், எஸ். ஆண்டித் தேவர், திருமதி இரா பாண்டியம்மாள் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர் களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கே. தவசி.

1993 ஏப்ரல் 2]

திரு. எஸ். ஆண்டித் தேவர் : தலைவரவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலிலே கொடுத்த உறுப்பினர். (குறுக்கீடு) அவர் முதலில் கொடுத்த உறுப்பினர்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : தலைவர் அவர்களே, நான்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் முதலில் கொடுத்த உறுப்பினர். திரு. கே. தவசி.

திரு. கே. தவசி : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, ''மதுரை மாவட்டம் உசிலம்பட்டியிலுள்ள பசும் பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரி சரிவர இயங்காமல் இருப்பது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை வராண்டாவில் முழக்கம் இட்டுக் கொண்டிருப்பது முறையல்ல. முறைகேடாகவே தொடர்ந்து இவர்கள் நடந்து வந்திருக்கிறார்கள். இன்றைக்கும் அத்தகைய முறைகெட்டதனத்தை வராண்டாவிலே செய்து கொண்டிருக்கிறார்கள். காவலர்கள் அவர்கள் அனைவரையும் அப்புறப்படுத்தவும்.

திரு. எஸ். ஆண்டித் தேவர் : தலைவர் அவர்களே,.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி, ஆண்டித் தேவர்.

திரு. இளம்வழுதி : தலைவரவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சொல்கிறேன். உங்கள் பிரச்சினைக்கு வருகிறேன். இதற்கு அடுத்து வருகிறேன்

திரு. இளம்வழுதி : தலைவரவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆண்டித் தேவருக்கு அனுமதித்து விட்டு, உங்களுக்கு பிறகு அனுமதிக்கிறேன், பின்னர் உங்கள் பிரச்சினைக்கு வருகிறேன். உட்காருங்கள் திரு. ஆண்டித் தேவர்.

திரு. எஸ். ஆண்டித் தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு உறுப்பினர்கள் கே. தவசி, ஓ. ஆர். இராமச்சந்திரன், திருமதி இரா. பாண்டியம்மாள் ஆகியவர்கள் கொடுத்த கவன ஈர்ப்புத்

தீர்மானத்தோடு என்னுடைய பெயரையும் இதில் சேர்த்திருக்கிறீர்கள். அது, ''மதுரை மாவட்டம் உசிலம்பட்டி பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரி சரிவர இயங்காமல் இருப்பது மற்றும் கல்லூரி முதல்வர்ரை அரசு உத்திரவுக்கு மாறாகப் பணியாற்ற அனுமதிக்காமல் இருப்பது குறித்து'' என்ற தீர்மானத்தில் என்னுடைய பெயரையும் சேர்த்திருக்கிறீர்கள். அது என்னுடைய க்ருத்துக்கு மாறானது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்களும் கொடுத்திருக்கிறீர்கள். இந்த அறிவிப்பு அவர்கள் கொடுத்தது. (குறுக்கீடு) நீங்கள் கேள்வி கேட்கும்போது சொல்லலாம். (குறுக்கிடு) நீங்களும் இந்தப் பொருள்பட அந்தக் கல்லூரி விவகாரம் பற்றிக் கொடுத்திருக்கிறீர்கள். ஒவ்வொரு உறுப்பினரும் ஒவ்வொரு விதமாகக் கொடுத்திருக்கின்றீர்கள். இந்த வார்த்தைகள் என்பது பேரவைச் செயலகம் அமைத்துக்கொண்ட வார்த்தைகள் ஒவ்வொரு உறுப்பினரும் வேறு வேறு விதமாக கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் கேள்வி கேட்கிறபொழுது, நான் கொடுத்ததில் இவ்வாறு கொடுத்திருக்கிறேன், எனவே அது சம்பந்தமான பதிலை நான் எதிர்பார்க்கிறேன் என்று கேட்கலாம். நீங்கள் கொடுத்த அறிவிப்பு அமைச்சருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும். நீங்கள் எப்படிக் கொடுத்தீர்களோ அது அமைச்சருக்கு கொடுக்கப்பட்டிருக்கும் வெவ்வேறு உறுப்பினர்கள் வெவ்வேறு விதமான வார்த்தைகளைக் கொடுத்திருக்கிற காரணத்தாலே பேரவைச் செயலகத்திலேயிருந்து இவ்வாறு போட்ட பொதுவான வார்த்தை. எனவே, அதிலே நீங்கள் உங்களுடைய கருத்தை, கேள்வி கேட்கிற பொழுது சொல்லலாம்.

திரு. எஸ். ஆண்டித் தேவர்: கருத்து வேறுபாடு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை நீங்கள் சொல்லலாம். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

முற்பகல் 11.30

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே பொருளைப் பற்றி கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுக்கிறபோது, வார்த்தைகள் மாறியிருந்தால் அதை சேர்த்துக் கொள்ளலாம். கருத்தே மாறியிருக்கிறபோது, மாறுபட்ட கருத்து வருகிறபோது, தனிப்பட்ட தீர்மானமாகத்தான் வருமே தவிர, இல்லாவிட்டால் அவர் பொது மக்களிடத்திலே, அவருடைய தொகுதி மக்களிடையே மாறுபட்ட கருத்தை இங்கு சொன்னதாக வந்து விடும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினருடைய வேண்டுகோளுக்கிணங்க. அவருடைய பெயர் அதிலே இருந்து நீக்கப்படுகிறது. அப்படியென்றால், உறுப்பினருடைய அறிவிப்பு தனியாகத்தான் எடுத்துக்கொள்ளப்படும். எனவே உறுப்பினர் இப்போது கேள்வி கேட்க முடியாது. மாண்புமிகு கல்வி அமைச்சர்.

* மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கை.

மதுரை மாவட்டம், உசிலம்பட்டியில் மறைந்த தலைவர் திரு. பி. கே. மூக்கையாத் தேவர் அவர்களால் 1968ல் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரி தொடங்கப்பட்டது. திரு. மூக்கையாத் தேவரின் மறைவுக்குப் பின்னர் நிர்வாகச் சீர்கேடுகளின் காரணமாக 29-10-1982 முதல் இதனை அரசு ஏற்று நடத்தியது. பின்னர் இக்கல்லூரியை நடத்திவரும் கல்விக் கழகத்தின் வேண்டுகோளுக்கிணங்க 21-6-1991 முதல் இக்கல்லூரியை மீண்டும் கள்ளர் கல்விக் கழகம் என்ற அமைப்பிடம் அரசு ஒப்படைத்து, கடந்த ஈராண்டுகளாகக் கல்லூரி நடந்து வருகிறது. புதிய நிருவாகம் பொறுப்பேற்ற பின்னர், இக்கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றி வந்த டாக்டர் கே. போஸ் என்பவரை ஊழல், நிதி முறைகேடு, தனிச் சலுகைகள் அளித்தல், கீழ்ப்படியாமை ஆகிய பல்வேறு குற்றச்சாட்டுகள் காரணமாக 18-12-1991 முதல் தற்காலிகமாகப் பணி நீக்கம் செய்தது. அதன் பின்னர் டாக்டர் கே. போஸ் என்பவர் மீதான குற்றச்சாட்டுகள் மீது கல்லூரி நிருவாகம் ஒழுங்கு நடவடிக்கை எடுத்து, கல்லூரி குழுவின் 10-6-1992 நாளிட்ட தீர்மானத்தின்படி டாக்டர் கே. போஸ் என்பவரை 10-6-1992 முதல் நிரந்தரப் பணி நீக்கம் செய்வதாக அறிவித்து, தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் முறைப்படுத்தும் சட்டத்தின் விதிகளின்படி மதுரை மண்டலத் துணைக் கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு ஒப்புதலுக்காக 26-6-1992ல் கல்லூரி நிருவாகம் அனுப்பியது. இதற்கிடையில் கல்லூரி கல்வி ஆணையாளரின் 24-8-1992 உத்தரவின்படி மேற்படி முதல்வர் மீதான விசாரணை தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் ஒழுங்காற்று சட்டத்தின்படி, இரண்டு மாதங்களுக்குள் முடிக்கப்படாமையால், டாக்டர் போஸ் அவர்களை மீண்டும் கல்லூரி முதல்வராகச் சேர்க்கப்படவேண்டும் என்ற உத்தரவிட்டார். எனினும், மேற்படிக் கல்லூரி நிருவாகம் தனது 17-1-1993 நாளிட்ட தீர்மானத்தின்படி, டாக்டர் போஸ் என்பவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை விசாரணை உரிய காலக் கெடுவுக்குள் முடிக்கப்பட்டதாகக் கூறி, 10-6-1992 முதல் (கடந்த காலம் உள்ளிட்ட) நிரந்தரப் பணி நீக்கம்

செய்வதாக உத்தரவிட்டு, டாக்டர் போஸ் இந்த உத்தரவை எதிர்த்து 30 நாட்களுக்குள் உரிய அதிகாரியிடம் முறையீடு செய்து கொள்ளலாம் என்றும் அறிவித்தது. அதன்மீது டாக்டர் கே. போஸ் உரிய அதிகாரியாகிய மதுரை மண்டல துணைக் கல்லூரிக் கல்வி இயக்குநரிடம் முறையீடு செய்து கொண்டதன் பேரில், மண்டலதுணைக் கல்லூரி கல்வி இயக்குநர் தனது 11-2-1993 நாளிட்ட உத்தரவில், கல்லூரி நிருவாகத்தின் பணி நீக்க உத்திரவுக்கு இடைக்கால தடை உத்தரவு வழங்கினார். இந்த இடைக்காலத் தடை உத்தரவை மண்டலத் துணை இயக்குநர் வழங்க இயலாது என்று வாதிட்ட கல்லூரி நிருவாகத்தின் கூற்றினை மறுத்து, மதுரை மண்டலத் துணை இயக்குநர், தனது 4-3-1993 நாளிட்ட செயல் முறைகளில், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரி நிருவாகம் 10-6-1992 முதல் டாக்டர் கே. போஸ் என்பவரை முதல்வர் பதவியிலிருந்து நீக்கியது செல்லாது என உத்தரவிட்டுள்ளார். அதன்படி 8-3-1993 முதல், தான் மேற்படி கல்லூரியின் முதல்வராகப் பொறுப்பேற்றுக் கொண்டதாக டாக்டர் போஸ் அறிவித்துள்ளார். இதற்கிடையில் மதுரை மண்டலத் துணை இயக்குநரின் இரண்டு உத்தரவுகளுக்கும் சென்னை உயர்நீதி மன்ற நீதிப் பேராணை எண் 4701/93-ன் கீழ் நீதிப் பேராணைப் பலவகை எண் 7554/93 நாள் 11-3-1993 மூலமாகத் தடை விதிக்கப்பட்டுள்ளன என்று மேற்படி கல்லூரி நிருவாகம் தந்தி அனுப்பியுள்ளது. அதே சமயம் தானும் 25 ஆசிரியர்/பணியாளர்களும் 18-3-1993 அன்று கைது செய்யப்பட்டதாகவும் கல்லூரி நிருவாகம் குண்டர்கள் துணையோடு கல்லூரியை நடத்தி வருவதாகவும், டாக்டர் தனது போஸ்தனது தந்தியில் தெரிவித்துள்ளார் மேற்படி சூழ்நிலையில் உசிலம்பட்டி பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரி குழப்பமான சூழ்நிலையில் நடைபெற்று வருவது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருப்பதால் நிலைமைகளைக் கூர்ந்து கவனித்து, தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் ஒழுங்காற்று சட்டத்தின் சரத்துகளின்படி கல்லூரி செயல்படுவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. தவசி,

திரு. கே. தவசி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் விரிவான அறிக்கையை நான் படித்துப் பார்த்தேன். இந்தக் கல்லூரியானது 1968 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு பசும் பொன் முத்துராமலிங்கத் தேவர் பெயரால் அமைக்கப்பட்டு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய மூக்கையா தேவர் அவர்களின் தலைமையில் சீரோடும் சிறப்போடும் நடந்து வந்தது. அதற்குப்பின்,, அவருடைய மறைவுக்குப்

1993 ஏபரல் 2] [திரு. கே தவசி]

பின்பு, 1982 ஆம் ஆண்டு இந்தக் கல்லூரி அரசின் மேற் பார்வையில், நிர்வாகக் குழுவின் முறைகேடுகளின் காரணமாக அரசிடம் ஒப்படைக்கப்பட்டு, நல்ல முறையில் 9 ஆண்டுக் காலம் அரசு நடத்தி வந்தது. மீண்டும் இந்தக் கல்லூரி, 21-6-1991' ஆம் தேதி முதல் நிர்வாகக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. கடந்த இரண்டாண்டு காலமாக அந்தக் கல்லூரியில் பல்வேறு நிர்வாகச் சீர்கேடுகள் ஏற்பட்டு, அரசின் ஆணையை நிறை வேற்றத் தவறியதும், நிர்வாகத்தில் குழப்பமும், ஆசிரியர்கள் வேலை நிறுத்தமும், அந்தப் பகுதியிலே சட்ட ஒழுங்கு சீர்குலைவும் ஏற்பட்டுள்ளது. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அறிக்கையிலே, ஒழுங்கு நடவடிக்கை எடுத்து இருக்கிறோம் என்று அறிவித்திருக்கிறார்கள்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கத்தைக் கேள்வி யாகக் கேட்க வேண்டும்.

திரு. கே. தவசி : அந்த ஒழுங்கு நடவடிக்கை எந்த முறையில் எப்போது நிறைவுபெறும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன். அதேபோல், 26-10-1992 ஆம் ஆண்டு ஏற்று நடத்தியதைப் போல நடத்துவதா? அல்லது, 1979 ஆம் ஆண்டு பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரி கமுதியிலே ஏற்பட்டு, 'கவர்னிங் கவுன்சில் பாடி' என்ற அமைப்பிடம் விடப்படுமா என்பதை நான் அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரியில் இப்போது ஒரு குழப்ப மான நிலைமை இருந்து வருகிறது என்பதை அரசு உணர்கிறது. அங்கே கல்லூரி முதல்வராகப் பணியாற்றி வந்த டாக்டர் போஸ் அவர்களுக்கும், கல்லூரி நிர்வாகத்திற்கும் ஏற்பட்டிருக்கிற கருத்து வேறுபாடுகளின் காரணமாக, அது இரண்டு கோஷ்டி களாகப் பிரிந்து, அங்கே அந்தக் கல்லூரி முறையாக நடை பெறாத வண்ணம் நிலைமைகளை உருவாக்கிக் கொண்டிருக் கிறார்கள். இந்த நிலைமை முன்பு ஒரு தடவை இருந்தபோது, அரசே கல்லூரியை எடுத்து நடத்தி வந்தது. பிறகு, சரியாக நடத்த முன்வந்த காரணத்தினால், கள்ளர் கல்விக் கழகம் என்ற அந்த அமைப்பிடம் அந்தக் கல்லூரி ஒப்படைக்கப் பட்டது. மறுபடியும் அதே பிரச்சினைகள் உருவாகியிருக் கின்றன. அதனுடைய எதிரொலியாகத்தான் இப்போது கவன ஈர்ப்புத் தீர்மானத்திலேகூட இரண்டு பிரிவுகளாக இருப் பதை நீங்கள் எல்லாம் பார்த்தீர்கள். பேரவைத் தலைவர் அவர்களே பார்த்துச் சொன்னார்கள். அவர்களுக்கும் இந்தக்

[டாக்டர் செ. அரங்கநாயகம்] [1993 ஏப்ரல் 2

கல்லூரியைப் பற்றி சரியாகத் தெரியும் என்று நான் கருதுகிறேன். அரசு, பிரச்சினைகளை ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஓ. ஆர். இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை ; திருமதி இரா. பாண்டியம்மாள்.

திருமதி இரா. பாண்டியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி என்பது என்னுடைய தொகுதி பின்தங்கிய தொகுதி ; பிற்பட்டோர் சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் வாழ்கிற பகுதி. 40 ஆண்டுகளுக்குப் பின் ஒரே கட்சிக்கு வாக்களித்து, மக்கள் என்னுடைய அன்புத் தலைவி, புரட்சித் தலைவி அவர்கள் மீது கொண்டுள்ள அன்பினாலும், பாசத்தினாலும் என்னை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பாக தேர்ந்தெடுத்துள்ளார்கள். அங்கு எங்களுக்கு என்று, பிரமலைக் கள்ளர் சமுதாயத்திற்கு என்று ஒரே ஒரு கல்லூரி இருக்கிறது. அது தேவர் திருமகன் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் பெயரால் இருக்கிறது. இந்தக் கல்லூரியில் கடந்த ஓராண்டு காலமாக, அதனுடைய செயலாளர், சூசைமாணிக்கம் என்டவரும், கல்லூரி முதல்வர் போஸ் அவர்களும் என இரண்டு கோஷ்டிகளாக அங்கே செயல்பட்டு அந்த கல்லூரியே நடைபெற விடாமல் தடுத்துக் கொண்டு, அடிக்கடி பிரச்சினைகள் வருகின்றன. சூசைமாணிக்கம் என்டவர் தன்னிச்சையாகச் செயல்படுகிறார். எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களிடம் வந்து பிரின்சிபால் போஸ் அவர்கள் முறையிட்டார்கள்.

முற்பகல் 11-35

இது பேரவைத் தலைவர் அவர்களுக்கும் தெரியும் என்று சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகையால் அவர்கள் இருவரும் எங்களிடம் முறையிட்டபோது நான் சொன்னேன், நாங்கள் இந்த கல்லூரிப் பிரச்சினையில் தலையிடமாட்டோம். நீங்கள் இருவரும் ஒன்றாகச் சேர்ந்து செயல்படுங்கள் என்று சொன்னேன். ஓராண்டு காலமாக இதைச் சொல்லிக் கொண்டிருந்தோம். அவர்கள் எந்தவிதச் செயல்பாட்டையும் செய்யவில்லை. அவர்கள் மூலமாக எந்தவிதத் திருத்தமும் ஏற்படவில்லை. கடந்த ஒரு சில தினங்களுக்கு முன்பு சட்டம் ஒழுங்கு பாதிக்கின்ற அளவுக்குச் சூழ்நிலையை உருவாக்கி, காவல் துறையினர் எந்தவித நடவடிக்கையும் எடுக்க முடியாத சூழ்நிலையை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தக் கல்லூரியை நல்லபடியாக நடத்த வேண்டும். அந்தக் கல்லூரியில் முன்னேற்றம்

ஏற்பட வேண்டும். எங்களுடைய அன்புத் தலைவி காலத்திலாவது அந்தக் கல்லூரியை அரசாங்கம் எடுத்து நல்லவிதமாக இயங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று எங்களுடைய அன்புத் தலைவி, புரட்சித் தலைவி அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அமைச்சர் அவர்கள் அதை சீக்கிரம் எடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு எடுத்துக்கொள்ள முன் வருவதற்கு முன்னால், அவர்களே முறையாக நடத்த முடியுமா என்பதை ஆராய்ந்து அதற்குப் பிறகு அரசு அதற்கான தக்க நடவடிக்கையை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு, திரு. சோ. இராசாராமன் இருக்கையில் இல்லை.

(5) 1—4—1993-ஆம் நாளன்று அவையில் நடந்த சம்பவம் குறித்து பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றைய தினம் அவையில் திரு. பரிதி இளம்வழுதி அவர்களுக்கும், திரு. சண்முகம் அவர்களுக்கும் ஏற்பட்ட வாக்குவாதம் மற்றும் சில சம்பவங்களைத் தொடர்ந்து என்னுடைய தீர்ப்பைச் சொல்லுகிறேன் என்று அறிவித்து இருந்தேன். நேற்றைய தினம் திரு. சண்முகம் அவர்கள் மட்டும் அவையில் இருந்தார்கள். அவரைக் கூப்பிட்டு அழைத்துப் பேசியிருந்தேன். இன்றுதான் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் வந்திருக்கிறார்கள். அவரையும் அழைத்து விசாரித்து அதன் பின்னர் என்னுடைய தீர்ப்பை வழங்குகின்றேன். (குறுக்கீடு).

திரு. இளம்வழுதி : பேரவைத் தலைவர் அவர்களே, விசாரணை தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, இல்லை. நான் நேற்றே சொன்னேன். அது என்னுடைய committment. உங்களை விசாரித்துச் சொல்லுகிறேன் என்றுதான் சொல்லி இருக்கிறேன். (குறுக்கீடு) இல்லை. நேற்று அவர் இல்லாததினாலே ஒரு தரப்பை விசாரித்து என்னுடைய முடிவைச் சொல்லிவிட முடியாது என்று சொன்னேன். (குறுக்கீடு) அதாவது திரு. சண்முகம் இப்படிச் சொன்னார். எனவே, இதுதான் என்னுடைய தீர்ப்பு என்று சொல்லவில்லை. இரண்டு தரப்பையும் விசாரிக்க வேண்டும் என்று நான் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) அவர் இன்று வந்து இருக்கிறார். இன்று அவரை விசாரித்து அதன் பிறகு என் தீர்ப்பைச் சொல்லுவேன்.